அன்புள்ள பெற்றோர்/பராமரிப்பாளர்

**‘ஆஸ்திரேலிய ஆரம்பகால வளர்ச்சிக் கணக்கெடுப்பு’**

இந்தக் கடிதம் மற்றும் இணைக்கப்பட்ட தகவல் தாளில் ;ஆஸ்திரேலிய ஆரம்பகால வளர்ச்சிக் கணக்கெடுப்பு’ (Australian Early Development Census (AEDC)) மற்றும் உங்கள் பிள்ளை/பிள்ளைகளின் தனிப்பட்ட தகவல்களைக் கையாள்வது பற்றிய முக்கியமான தகவல்கள் உள்ளன.

எங்கள் பாடசாலை இந்த ஆண்டு மே மற்றும் ஜூலை மாதங்களுக்கிடையே AEDC-இல் பங்கேற்கும். AEDC என்பது ஆஸ்திரேலிய அரசால், மாநில மற்றும் பிராந்திய அரசுகளுடன் இணைந்து ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் தேசிய கணக்கெடுப்பு ஆகும். முழுநேரப் பாடசாலையில் முதல் ஆண்டைத் தொடங்கும் நேரத்தில் பிள்ளைகள் எவ்வாறு வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதை இது அளவிடுகிறது.

AEDC-யில் பங்குக்கொள்வது சுயவிருப்பத்தின் அடிப்படையிலாகும் மற்றும் பிள்ளைகள் பாடசாலையில் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறார்கள் அல்லது அவர்களின் பாடசாலை மற்ற பாடசாலைகளுடன் எவ்வாறு ஒப்பிடுகிறது என்பதை இது அளவிடுவதில்லை. அதற்கு பதிலாக, பிள்ளைகள் ஐந்து முக்கிய பகுதிகளில் எவ்வாறு வளர்ந்து முன்னேறுகிறார்கள், என்ன சிறப்பாக செய்யப்படுகிறது மற்றும் எதை மேம்படுத்தலாம் என்பதை இது காட்டுகிறது. AEDC தரவு, பிள்ளைகள் மற்றும் குடும்பங்களுக்கான சேவைகள் மற்றும் ஆதரவுதவியைத் திட்டமிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் பாடசாலைகள், மழலைக்கான ஆரம்பக்கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அரசாங்கங்களால் பயன்படுத்தப்படுகிறது. இதனால்தான் பாடசாலையின் முதல் ஆண்டில் படிக்கும் அனைத்து பிள்ளைகளும் AEDC-யில் சேர்க்கப்படுவது முக்கியம். https://www.aedc.gov.au-இல் AEDC தரவு பயன்படுத்தப்படும் வழிகளைப் பற்றி மேலும் அறியலாம்.

**உங்கள் பிள்ளைக்கு இது எதை அர்த்தப்படுத்துகிறது?**

பிள்ளைகள் பற்றிய அவர்களின் அறிவின் அடிப்படையில் ஆசிரியர்களால் AEDC நிரப்பப்படுகிறது. கணக்கெடுப்பில் சேர்க்கப்படுவதற்கு பிள்ளைகள் எதுவும் செய்ய வேண்டியதில்லை, கணக்கெடுப்பு நடத்தப்படும்போது வழக்கம் போல் அவர்கள் வகுப்பில் கலந்துகொள்வார்கள்.

கணக்கெடுப்பு பின்வரும் தேதியில் ஆரம்பமாகும்: ____________________

உடல் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, உணர்வு ரீதியான முதிர்ச்சி, சமூகத் திறன், மொழி மற்றும் அறிவாற்றல் திறன் (பாடசாலை அடிப்படையிலானது) மற்றும் தொடர்பாடல் திறன் மற்றும் பொது அறிவு ஆகிய மழலைக்கான ஆரம்பக்கல்வி வளர்ச்சியான ஐந்து முக்கியப் பகுதிகள் பற்றிய கேள்விகளுக்கு ஆசிரியர்கள் பதிலளிப்பார்கள். நீங்கள் அனைத்து கேள்விகளையும் https://www.aedc.gov.au/avedi-இல் பார்வையிடலாம்.

**உங்கள் பிள்ளையின் தனிப்பட்ட தகவல்கள் பாதுகாக்கப்படும் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம்.**

உங்கள் பிள்ளையின் தகவலை தனிப்பட்டதாக வைத்திருப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நாங்கள் புரிந்திருக்கிறோம். இதனால்தான் AEDC அவர்களின் தகவல்களைச் சேகரித்து வைத்திருக்க பாதுகாப்பான இணையதளத்தைப் பயன்படுத்துகிறது.

AEDC தரவு (உங்கள் பிள்ளையின் தகவல் உட்பட) எவ்வாறு சேகரிக்கப்படுகிறது, பாதுகாக்கப்படுகிறது மற்றும் பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றிய கூடுதல் தகவல் இந்த தகவல் தாளில் உள்ளது.

**பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும்?**

AEDC-இன் தேவைகளுக்காக, ஆஸ்திரேலிய அரசின் கல்வித் துறை, எங்களது பாடசாலையில் இருந்து உங்கள் பிள்ளையைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்க உங்கள் ஒப்புதலைக் கோருகிறது. இதில் உங்கள் பிள்ளையின் ஆரோக்கியம் பற்றி அறியப்பட்ட தகவல்கள் அடங்கும்.

உங்கள் பிள்ளையின் தகவலை சேகரிப்பதற்கு நீங்கள் ஒப்புக்கொண்டால், நீங்கள் எதுவும் செய்ய வேண்டியதில்லை.

உங்கள் பிள்ளையின் தகவலைச் சேகரிப்பதற்கு நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், கீழே கொடுக்கப்பட்டுள்ள தேதிக்கு முன் கீழே பட்டியலிடப்பட்டுள்ள நபரைத் தொடர்பு கொள்ளவும், உங்கள் பிள்ளையைப் பற்றிய எந்தத் தகவலும் சேகரிக்கப்பட மாட்டாது:

தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயர் ____________________

பாடசாலைத் தொடர்பு நபரின் தொடர்பு விவரங்கள் ____________________

விலகுவதற்கு பாடசாலை தொடர்பு நபரைத் தொடர்புகொள்வதற்கான கடைசி தேதி ____________________

இதற்கு பிறகும் உங்கள் ஒப்புதலை திரும்பப் பெறலாம். நீங்கள் அவ்வாறு செய்தால், ஆஸ்திரேலிய அரசின் கல்வித் துறை உங்கள் பிள்ளையின் தகவலைப் பயன்படுத்துவதை நிறுத்திவிடும் மற்றும் வேறு யாருக்கும் வழங்காது. இருப்பினும், ஏற்கனவே பகிரப்பட்ட, அறிக்கையிடப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட தகவலை அகற்ற முடியாது மேலும் அவை தொடர்ந்து பயன்படுத்தப்படலாம் (ஆனால் அந்தத் தகவலில் உங்கள் பிள்ளை தனிப்பட்ட வகையில் அடையாளம் காண முடியாது).

AEDC பற்றி மேலும் அறிய, AEDC இணையதளத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதியை https://www.aedc.gov.au/parents/faq-for-parents-இல் வாசிக்கவும் அல்லது 1800 092 548-இல் அழைக்கவும்.

இந்தக் கடிதத்திலும் மற்றும் தகவல் தாளிலும் விவரிக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மட்டுமே உங்கள் பிள்ளையின் தகவல்கள் பயன்படுத்தப்படும். அவர்களின் தகவல் எவ்வாறு பாதுகாக்கப்படும் மற்றும் பகிரப்படும் என்பது பற்றிய கூடுதல் விவரங்களை AEDC இணையதளத்தில் உள்ள தனிப்பட்ட ‘தகவல் பாதுகாப்பு அறிக்கை’ வழங்குகிறது, மேலும் அதனை இங்கே காணலாம்: www.aedc.gov.au/parents/privacy-statement.

AEDC- ஐ ஆதரித்ததற்கு நன்றி.

அதிபர்

### தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை

பாடசாலையைத் தொடர்புகொள்ள உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450 என்ற எண்ணை அழைக்கவும், உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதை தொலைபேசி இயக்குனரிடம் கூறி, பாடசாலையை அழைக்கச் சொல்லவும். உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவ, தொலைபேசி இயக்குனர், ஒரு உரைப்பெயர்ப்பாளரை அழைப்பில் இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.